**அனுப்புநர்**

முனைவர்.சி. உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண். 000002 / எச்.1 / 2021** **நாள் :25.02.2021**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு, மே 2021 – தனித் தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல் – செய்திக்குறிப்பு வெளியிட வேண்டுதல் – தொடர்பாக.

-----

நடைபெறவிருக்கும் மே 2021, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள், கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களுக்கு (Government Examination Service Centres) நேரில் சென்று ஆன்–லைனில் விண்ணப்பித்தல் தொடர்பான செய்திக்குறிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக்குறிப்பை தனித் தேர்வர்கள் மற்றும் பொதுமக்கள் அறியும் வண்ணம் தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் / வானொலியில் செய்தியாக வெளியிடுமாறும் ஒளி/ஒலி பரப்பிடுமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

'இது விளம்பரம் அல்ல' எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு :** செய்திக்குறிப்பு.

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை 600 006**

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு மே 2021**

**தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல்**

# செய்திக் குறிப்பு

நடைபெறவுள்ள மே 2021 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான தனித்தேர்வர்களிடமிருந்து, இணைய தளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கடந்த ஆண்டு நேரடித் தனித்தேர்வராக மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற / பெறாத தேர்வர்கள் அனைவரும், தற்போது மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வெழுதுவதற்கு விண்ணப்பிக்கலாம்.**

**விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள்**

**மே 2021, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித் தேர்வர்கள், 26.02.2021 ( வெள்ளிக் கிழமை) பிற்பகல் முதல் 06.03.2021 (சனிக்கிழமை) வரையிலான நாட்களில் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்களுக்கு (Service centres) நேரில் சென்று இணையதளம் மூலம் தங்களது விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ளலாம்.**

**தக்கல் (சிறப்பு அனுமதி) முறையில் விண்ணப்பிப்பதற்கான நாட்கள்**

மேற்காண் தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறியவர்கள் **08.03.2021 (திங்கட்கிழமை) மற்றும் 09.03.2021 (செவ்வாய் கிழமை) ஆகிய இரு நாட்களில்** அரசுத் தேர்வுத் துறை சேவை மையத்திற்கு நேரில் சென்று தேர்வுக் கட்டணத்துடன் **கூடுதலாக ரூ.1000/– சிறப்பு கட்டணமாக** செலுத்தி ஆன்–லைனில் தட்கல் முறையில் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

**அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள்**

**கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுத் துறை சேவை மையங்களின் (Government Examinations Service centres) விவரங்கள் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பங்களை பதிவு செய்தல் குறித்த தனித்தேர்வர்களுக்கான தகுதி மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம்.** மேலும், இவ்விவரங்களை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

**ஒம்./–**
**இயக்குநர்**

**இடம்: சென்னை–6**
**நாள் : 25.02.2021.**